Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஞு (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுஎ] யாழ்ப்பாணம்:- மன்மத ஞு கார்த்திகைமீ உங உ வெள்ளிக்கிழமை (9 DEC. 1955) [இல-ந-சு]

# சைவநன்னெறியில் நடந்து காட்டிய நாவலர் பெருமான்

## அவதார புருடராய் அவதரித்த ஐந்தார் குரவர்

### அக்காலத்தோடு எக்காலத் தேவையையும் பூர்த்தி செய்து விளங்கினர்

நாட்டிற்கு நன்மை செய்பவர்களே நல்லவர்கள். அரசியல் வழியிலோ, அல்லது ஆத்மீகத் துறையிலோ நன்மை செய்பவர்களே நல்லவர்கள். அந்த நல்லவர்களே "நா" வல்லவர்கள். அன்புடைமைக்கு அத்தாட்சியாகத் திகழும் அப்பர் அடிகளை எடுத்துக்கொள்ளுங்கள். நாவீற்றின் நயத்தாலன்றோ நாவுக்கரசர் என்னும் பெயர் பெற்றனர். காந்தி மகாத்மாவைப் பாருங்கள். பாரத நாட்டிற்கு அவர் செய்த சேவை உள்ளங்கை நெல்லிக்கனியென இலங்குகின்றது. அவரது "நா" வன்மைதான் என்னே!

உருக்குலைந்து பிளவுபட்டுக் கிடந்த பாரத நாட்டை ஒன்று சேர்த்தது அவரது நாவின் சக்தியே. தங்கள் சாம்ராச்சியத்தில் சூரியனே அஸ்தமிப்பதில்லையென்று பெருமைபேசிக் கொண்டிருந்த பிரித்தானியரே அடிபணிந்தனர் என்றால் காந்திமகானின் 'நா' வன்மைதான் என்னே? நா வன்மை படைத்தவர்களையே நல்லுலகம் 'நாவலர்' என்று போற்றுகிறது. நம் நாட்டில் நாவீறு படைத்தோர் ஒரு சிலரே. அவர்களிலும் "நாவலர்" என்ற பட்டப் பெயர் பூண்டவர் ஒருவரே ஒருவர்தான். அவரே நம் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரவர்களாகும்

நல்லவர்கள், பெரியோர்கள், தீர்க்கதரிசிகள், நல்ல ஊர்களிலே அவதரிக்கின்றனர். நமது நாவலரும் நல்ல ஊராகிய நல்லூரிலேயே 18—12—1822-ல் தோன்றியது நம நாடு செய்த நற்றவத்தாலன்றோ. நல்லூரின் சிறப்பை அறிந்தேபோலும் யாழ்ப்பாணத்துத் தமிழ் அரசர்கள் நல்லூரையே தலைநகராகக் கொண்டனர். ஒரு நாட்டின் பெருமை அதனை ஆளும் அரசரிடத்துமில்லை. அதனை ஆட்டிவைக்கும் அரசியல் வாதிகளிடத்துமில்லை. நாட்டின் வற்றாத நதிகளும் குன்றாத சுரங்கங்களும் பெருமையைத் தரா. மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் சிறப்பை எடுத்தியம்பமாட்டா? ஆனால் அந்நாட்டின், பெருமை, செழுமை, உயர்வு எல்லாம் அந்த நாட்டிலே அவதரிக்கும் மகான்களையே பொறுத்திருக்கின்றது. எந்த ஊரிலே தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் உத்தமர்கள் உதிக்கிறார்களோ; எந்த ஊரில் பழம் பெருமையை நிலை நிறுத்தக் கூடிய, மக்களின் மனதைத் தூண்டிவிடக் கூடிய, கர்த்தர்கள் உதயமாகின்றார்களோ அந்த ஊர்தான் பெருமை

கொள்ளத்தக்க ஊர் — அந்த ஊர்தான் நல்லூர்—நல்லூர்,


மகான்கள் கால எல்லையைக் கடந்தவர்கள். இவர்கள் ஒரு

ஆக காலத்திலே தோன்றி அந்தக் காலத்துக்கு ஏற்ற வகையில் பணியாற்றுகிறார்கள் என்பது உண்மை. ஆனால் அந்தக்காரி

திரு. வெ. சு. நடராசா
கொழும்பு

யங்கள் எக்காலத்திற்கும் பொருத்தமுடையனவாக இருக்கின்றன. இங்ஙனமே இவர்கள் உலகத்திற்கே தங்

தொடர்ச்சி 6-ம் பக்கம்



## அரசியற் சூழ்வழியின் அபாயம்பற்றி சேர். கந்தையாவின் எச்சரிக்கை

நீர்வேலி ஸ்ரீ சுப்பிரமணிய சேமாபிவிருத்திச் சங்கத்தில் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் பேசும்போது யாழ்ப்பாணத்துக்குப் புயல் உண்டாக்கிய நட்டம் மிகப் பெரிதே எனினும் அதற்கு நிவாரணம்செய்யலாம். ஆனால் வீச இருக்கின்ற அரசியற்சூழ்வளியின் ஆபத்தோ அளவிடற்கரியது; தாங்கொணாதது என்று எடுத்துக் [illegible] கப் போபத்திலிருந்து தப்புதற்கு வேண்டிய வழிவகைகளை மக்களே அமைக்கவேண்டுமென்று எச்சரிக்கை செய்தார். தலைவர்களென்று முன் வந்திருப்போருள் ஒற்றுமை என்பது ஒருசிறிதும் ஏற்பட முடியாதிருப்பதனால் மக்கள் தங்கள் கருமங்களைத் தாங்களே செய்தல்வேண்டுமென்று நிலைமையைவிளக்கினர். எதையும் செய்வதற்குத் தாம் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறார் என்பதை எடுத்துக் [illegible] யதொன்றுமில்லை என்பதைச் சுட்டிக்காட்டினர்,

அரசியல் அலை:

# மந்திரி 'J. R.' இன் வகுப்புவாதம் போதாதாம்!

## திரு. R. G. சேனநாயகவின் கண்டனத்தின் உட்கருத்தென்ன?

இராணி எலிசபெத்து (இரண்டாவது) இலங்கைக்கு வந்தபொழுது சிங்களத்தை அரி ஆசனம் ஏற்றுவித்துத் தமிழைத் தள்ளிவிழுத்திய மந்திரி J. R. ஜயவர்த்தனவின் வகுப்புவாத வீச்சுப் போதாதாம் .... .... .... .... !


அரசாங்க சபையிலே சிங்களமே அரசமொழியாய்க் கணிக்கப்படுதல் வேண்டுமென்று அடி எடுத்து மொழிப் பிணக்கை முதன்முதல் ஆரம்பித்து வைத்த 'J. R' இன் வகுப்புவாதப் போக்குச் சரியில்லையாம்!!

களனித் தொகுதியிலே ஐ. தே. கட்சியின் ஆண்டுக் கூட்டத்தை நிறுவிச் சிங்கள புத்த வகுப்புவாதத்தை நிலைநாட்டத் துணிந்து நிற்கும் J. R இன வகுப்புவாத ஆர்ப்பாட்டம் அணு அளவுதானாம்!!!

எவ்வாறிருக்கிறது எழுந்திருக்கும் ஒருமொழி வகுப்புவாதம்! இந்தக் குற்றச்சாட்டை 'J. R' இற் சுமத்திய வீரன் யார்? பழைய தேசாபிமானவீரர் திரு F. R. சேனநாயகவின் தவப்புதல்வனும் எல்லாச் சாதியினருக்கும் எம்மதத்தினர்களுக்கும் சமஉரிமை உண்டு என்ற வாக்குறுதி கொடுத்துமறைந்த முதன் முதலாகப் பிரதமராயிருந்த திரு. D. S. சேனநாயகாவின் தமையனாரின் அருமை மகனும் ஆகும் திரு R. G சேனநாயக எனும் பெரியாரே.

இந்தக் கூற்றின் கருத்தென்ன? இடதுசாரிகளுட் பொதுவுடைமைக் கட்சியினர் சமசமாசக் கட்சியினர் புரட்சிப் போக்குப் போதாது என்று புகார் கிளப்பியதுபோலல்லவா இருக்கின்றது இந்தக் கூச்சல்?

பொதுசனத்தைப் புரட்சிப் போக்கிற் புகுத்தி வகுப்புவாத வெறிகொண்டு ஆகாத பழியும் பாவமுமான செயல்கள் இயற்றுவிக்கப் புத்தமதத்தின் பேரால் பாராளுமன்றத்து அங்கத்தவர்கள் முன்னாள் அமைச்சர்கள் தாண்டிவிடுவதென்றால் மக்கள் என்னதான் செய்தல்முடியும் .... .... ....?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

யாழ். மன்மத ஹு கார்த்திகை மீ உ௩ உ வெள்ளிக்கிழமை


## பயிரிடுவோரின் பரிதாப நிலைமை

—0—

நெற்றி வியர்வை நிலத்திற் சிந்த உடம்பால் உழைத்து உதிரத்தைத் தியாகஞ் செய்து வரும் கமக்காரர்களுக்கு இயற்கை விபரீதத்தால் விளையும் நெருக்கடியை யார்தான் எதிர் பார்த்தல் முடியும். வெள்ளப் பெருக்கால், வேகத்துடன் வீசும் புயற்காற்றினுற் காலத்துக்குக் காலம் பயிர்ச்சேதம் விளைவதால் நிலத்தையும் நீண்டவானத்தையும் நோக்கி வாழ்க்கைப்போர் ஆடும் கமக்காரருக்குண்டாகும் கவலையை அரசினரும் ஏளனஞ் செய்துவிடுவதானுல் அவர்கள் யார்க்கெடுத் துரைப்பார்கள்!

முன்னர்ப் பல முறைகளிலே பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டு மக்கள் பரிதபித்தபொழுது அரசினர் ஆறுதல் மொழிகள் கூறினரேயன்றி உண்மையான உதவியைச் செய்யவில்லை என்பதை யாவருமறிவர். இப்பொழுதும் நட்டம் ஏற்பட்டவர்களுக்கு எந்த முறையிலே அரசாங்க உதவி கொடுபடும் என்பது மூடு மந்திரமாகவே யிருக்கின்றது. அரசினரின் சுற்றறிக்கை ஒன்றைக் கண்ட கமக்காரர்கள் கலங்கி நிற்கின்றார்கள். பயிர்ச் சேதத்திற்குப் போதிய அளவு நட்டஈடு கொடுப்பதற்கு அரசினர் உளங்கொண்டிருப்பதாய்க் காணப்படவில்லையென்று கமக்காரர்கள் கவலையுறுகின்றார்கள். நட்டஈடு கொடுப்பது பாதிக்கபபட்டவர்களைக் காப்பாற்றி வைப்பதற்கா? அல்லது அரசாங்க ஒழுங்கு என்ற வாகட முறையைப் பின்பற்றிச் சமாளித்துவிடுவதற்கா? என்று கேட்கின்றோம்.

இராணி வரவேற்பில் வேறு வைபவங்களிலே கோடிக்கணக்கான பொன்னைக் குவியல் குவியலாகக் கொட்டிச் செலவுசெய்யும் அரசாங்கம் மக்கள் வாழ்க்கையில் அல்லற்பட்டு வகையறியாது திகைத்து நிற்கும்போது உதவிகொடுக்க இதஞ்சமாதானமாக முன் வராதிருப்பதை நோக்குமிடத்து மக்கள் ஆட்சி முறையிலும் ஆறுதலும் ஆதரவும் பொதுசனத்தாற் பெறுதல் முடியாதுபோலத்தோன்றுகின்றது.

x x x

## இந்த முடிபு எதற்காக?

தமிழ் ஆசிரியர்கள் போதியளவு இருக்கின்றார்கள். எனவே, தமிழாசிரியர் தராதரப் பத்திரத் தேர்வு நடத்தக் கல்விப்பகுதியார் எண்ணங் கொள்ளாதிருக்கின்றனர் எனப் பாராளுமன்றத்திலே கல்வி அமைச்சர் சார்பாகக் கூறப்பெற்றிருக்கின்றது.

ஆசிரியர்கள் போதியளவு இல்லை என்று சொல்வதும் அரசாங்கத்தார்; அளவுக்கு மேலதிகமாக இருக்கின்றார்கள் எனக் கூறுவதும் அரசாங்கத்தார் என்றால் எதை நம்புதல் கூடும். அது ஒருபுறம் இருக்க ஆசிரியரைப் பயிற்றுதல் அல்லது ஆசிரியத் தராதரப் பத்திரம் வழங்குதல் எதற்காக நடைபெறுதல் வேண்டும் என்பதைக் கல்விப் பகுதியாராவது அமைச்சராவது அறியவில்லைப் போலும். தேர்வு நடத்துவதால் அரசினருக்கு எவ்விதமான இடையூறு விளைகின்றது. தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியர்களுக்கு உடனே உத்தியோகம் கொடுத்தல் வேண்டுமென்று அரசாங்கம் கட்டுப்பட்டிருக்கின்றதா?

# பேராசை பெருக்கும் உள்ளத்திற்கு ஒரு சாட்டை

—:o:—

## புலவர்களின் உள்ள ஊற்றுப் பெருக்கெடுக்கச் செய்யும் ஆற்றுப் பெருக்கு

(முற்றொடர்—3)

### உளம் ஒன்றே

**சாட்டையின் வேட்டை!** குதிரை வேகமாக ஓடுகிறது. சுற்றிலுமிருந்த மனிதர்கள் ஆரவாரஞ்செய்கிறார்கள். கைகளிலுள்ள புத்தகம் மூக்குக்கண்ணாடி, கைக்குட்டை, தொப்பி, இவைகளெல்லாம் விசும்பில் பறக்கின்றன. ஏன்? இவற்றையெல்லாம் எறிந்த மனிதனே விண்ணை நோக்கி ஆர்வமிகுதியால் எழும்புகிறான். இக் காட்சிகளை நம் நாட்டில் சென்னையிலும் உதகமண்டலத்திலும் பங்களூரிலும் காண்கிறோம். மனிதனைப் பரிதாபத்திற்குரிய இங்நிலைக்கு ஆளாக்குவது அவனது பேராசை. ஒரு குதிரையின்மீது பணயம் வைக்கிறான். அக்குதிரைதான் வெற்றி பெற வேண்டுமென்ற ஒரு அசட்டு ஆசை. தன்னை மறக்கிறான். தன் சுற்றுப்புறத்தையும் மறக்கிறான். அந்த அற்ப ஆசை அவனது நாகரிக உள்ளத்திற்கு ஒரு சாட்டை.

மதுரை திரு. பட்டாபி நாராயணன் B. Sc

வெற்றியை நோக்கிப் பறந்து செல்லும் அக் குதிரையின் வெறியுணர்ச்சிக்கும் காரணமாயுள்ளது ஒரு சாட்டை. வெற்றி எல்லை நெருங்க நெருங்கச் சாட்டைக்கு அதிக வேலை கொடுக்கிறான் அதன் மீது சவாரி செய்பவன். அடி பலக்கப் பலக்கக் குதிரையின் வேகமும் அதிகரிக்கிறது.

இதுபோன்றே மனிதனின் ஒவ்வொரு உணர்ச்சி, செய்கை இவைகளுக்கெல்லாம் ஒரு சாட்டை இன்றியமையாதது. வாழ்க்கையெனும் குதிரையின் வேகங் குறையக் குறைய ஒரு சாட்டையின் அவசியத்தை ஒவ்வொருவனும் உணர்கிறான். பிறரிடமிருந்து தான் பெற்ற அனுபவம், தானே கண்டுணர்ந்த உண்மை, விடாமுயற்சி, பெற்ற செல்வம், கற்ற கல்வி என்பவை தாம் அவனுடைய சோர்ந்த உள்ளத்திற்குச் சாட்டையெனப் பயன்படுகின்றன. இழந்த மனவலிமையை அவன் மீண்டும் பெறுகிறான். அவனது வாழ்வுச்சுடரை மேற்சொன்ன தூண்டு கோலகள் பிரகாசிக்கச்செய்கின்றன.

கவிஞன் உளமும் இத்தகையதே! அவனும் மனிதப் பிறவிதானே? மேற் கூறிய நியதிகளுக்குட்பட்டவன்தானே? தன் கற்பனை ஊற்றினை வற்றிருக்கச் செய்யும் பணியிலே அவன் ஈடுபட்டுள்ளான். இப்பணியில் அவனுக்கும் ஒரு சாட்டை பெரிதும் பயன்படுகிறது.

அவன் உபயோகப்படுத்தும் சாட்டை எது? அது தான் அவனுடைய கவிநோக்கு. எப்பொருளையும் எந் நிகழ்ச்சியையும் அவன் அக் கவிநோக்குக் கொண்டு பார்க்கிறான். ஆராய்கிறான். அது அவனுடைய கற்பனைக் குதிரைக்குச் சவுக்கடி கொடுக்கிறது. அக் குதிரையும் விசும்பில் எழும்புகிறது. அதன் மீதேறிக் கொண்டு சவாரிசெய்கிறது அவனுடைய உணர்ச்சிப் பெருக்கெடுத்த உள்ளம். அவன் ஏதோ ஒரு புதிய உலகை அடைகிறான். அங்கு முற்றிலும் புதியதொரு சூழ்நிலையிருப்பதை உணர்கிறான். அங்கு வீணையின்றி நாதங்கேட்கிறது. பண்ணிசைக்கப்படுகின்றது

தொடர்ச்சி 6-ம் பக்கம்

## தமிழ் நாட்டிற் புயலின் கொடுமை

யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல இந்தியாவிலும் உயிர்ச்சேதங்களுடன் பெரும் நட்டத்தைப் புயல் செய்து விட்டதாம். அதனுல் அரிசி உதவி செய்யும்படி மத்திய அரசாங்கமூலம் சென்னை அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றதாம். அவ்வுதவியை இலங்கை அரசாங்கம் செய்யுமென்று கருதப்படுகின்றது.

## திருக்கேதீச்சரம் 3-ம் சோமவாரமும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையும்

சென்ற திங்கட்கிழமை (5-12-55) திருக்கேதீச்சரத்தில் 3ம் சோமவார விழா யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு அடியார்களால் நடத்தப்பட்டது. காலை 9 மணி அளவில் சங்காபிஷேகம் ஆரம்பமாகி நண்பகல் விசேட பூசையுடன் நிறைவேறியது.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருமடாலயத்தில் சிவனடியார் பூசை, மகேஸ்வர பூசை முதலியன நடைபெற்றன. மாலை 2 மணி அளவில் ஆறுமுகநாவலர் மடத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்பெருமானின் குரு பூசை நடந்ததும் கௌரவ சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் பரமேஸ்வரக் கல்லூரி ஆசிரியர் திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள் சிவ வணக்கமும் நாவலர் பெருமானும் என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினுர். பண்டிதர் க. நமசிவாயம் அவர்கள் நாவலர்பெருமானின் ஒழுக்க சீலங்களைப்பற்றித் தொகுத்துக்கூறினுர். ஈற்றில் அடம்பன் அரசினர் கனிஷ்டபாடசாலை மாணவ மாணவிகளுடன் திருக்கேதீச்சர சைவப்பாடசாலை மாணவ மாணவிகளின் தேவாரப் போட்டி நடந்தது. பரிசுகள் வழங்கப் பெற்றன. இரவு ஏழு மணியளவில் கௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சரநாதர் எழுந்தருளித் திருவிழா தேவார பாராயணத்துடன் நடந்தது. திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபைக்குப் புதிய அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டார்கள். கட்டட நிதிக்கு நன்கொடையும் உதவினுர்கள்.

## வேதாகம பாடசாலை அமைக்கும் முயற்சி

சைவசமயக் குருக்கள்மாருடைய சிறுவர்களுக்கு தமிழ் சமஸ்கிருதம் சைவ சமயசாத்திரங்கள் முதலியவற்றைக் கற்பிப்பதைப் பற்றி ஆலோசனை செய்தற்கு 26-11-55 சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சைவபரிபாலன சபையின் தாபன அங்கத்தவருள் ஒருவரும் பழைய தலைவருமாகிய நீராவியடி திரு. ஆ. தில்லையம்பலம் அவர்கள் இல்லத்தில் சைவ அபிமானிகள் சிலர் கூடிச் சில முக்கிய தீர்மானங்களைச் செய்தார்கள்.

1. சைவ வேத சிவாகமப் பாடசாலைக் குழு (கொம்மிற்றி) ஒன்றினை நிறுவுதல். ஷை குழு (கொம்மிற்றி)வின் உத்தியோகஸ்தர்களும் உறுப்பினர்களும்.

தலைவர்: சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்கள்.

காரியதரிசி: திரு. மு. மயில்வாகனம்.

தனுதிகாரி: திரு. அ. தில்லையம்பலம்

ஏனைய அங்கத்தவர்கள் திருவாளர்கள்: வே. கந்தையா, சி. நாகையா, அ. நாகலிங்கம் பிரம்மஸ்ரீ ச. முருகேச ஐயர்.

2. குருமார் வகுப்பிற் சேர்ந்து படிக்ககூடிய பிள்ளைகளைத் தேடுதல்.

3. கைலாசபிள்ளையார் கோயிலில் குருமார் வகுப்பை நடத்திவருகின்றவர்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறனெனப்படுவது இல்வாழ்க்கையே

## இல்லவள் மாண்புடையளானால் இல்லாததொன்றுளதுகொல்?

### கற்பரசிகளின் சிறப்புப்பற்றி கச்சியப்பரும் வள்ளுவருங்கொண்ட கருத்து

பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன நான்கு படிகள். இதில் இரண்டாவது படியாகிய கிருகஸ்தம், இல்லறம் என்று அழைக்கப்படும். நான்கு பாதங்களில் இதுவே சிறந்ததென்பது பெரியோர்கள் கருத்து. "இல்லறமல்லது நல்லறமன்று" என்று கூறினர் ஔவையார். அறவியலை இல்லறவியல், துறவியல் என இரண்டாக வகுத்தார் வள்ளுவர். அன்பு தருமம் என்பவற்றை விளங்கிக்கொள்வதற்கு இல்லறமே சிறந்த நிலையாகும். "அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை" என்பது வள்ளுவர் வேதம். "இந்திரர் புகழும் தொல்சீர் இல்லறம்" என்பது கச்சியப்பர் வாக்கு.

இல்லறத்திலே நிற்பவன் மற்றைய மூன்று நிலைகளிலேயும் நிற்பவர்க்கு உதவி செய்கிறான். இறந்தவர்கள் நல்லநெறியடைய வேண்டியவற்றைச் செய்கின்றான். தமக்கு வரும் விருந்தினர்களை இன்முகம் கொண்டு வரவேற்கிறான். பல தர்மங்களைச் செய்கிறான். இவ்வாறு தரும நூல்களிலே சொல்லப்பட்ட வழிகளிலே நின்று இல்லற தருமம் ஆற்றுபவனுக்கு வேறுநிலைகளில் போய்ப் பெறுகின்ற பயன் ஒன்றுமில்லை என்று வள்ளுவர் கூறுகிறார்.

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாறிற் போஒய்ப் பெறுவதெவன்" என்பது வள்ளுவர் வாக்கு.

"துறந்தவர்கள் வேண்டியதொர்
திப்புரவு நல்கி
இறந்தவர்கள் காமுறு
மிருங் கடனியற்றி
அறம் பலவுமாற்றி
விருந்தோம்பு முறையல்லாற
பிறந்த நெறியாலுளதோர்
பேருதவி யாதோ"

என்று திருவள்ளுவர் கருத்தையே கச்சியப்பரும் கூறுகிறார்.

"இல்லறம் நல்லறமாவதற்கு உதவி செய்வோர் கற்புடை மகளிர். மனைவி நற்பண்பு உடையவளானால் வாழ்க்கையில் யாவும் நிலைபெறும். கற்புடைய பெண்ணிற்கு ஆடவரும் நிகரில்லை. கணவனைக் கடவுளாகப் போற்றும் பெண்ணினது கட்டளையில் மழையைச் சொரியும் முகிலும் நிற்கும். அவள் சிறப்பையுடைய தெய்வ வாழ்வைப் பெறுவாள் என வள்ளுவர் வாழ்க்கைத் துணை நலம் என்னும் அதிகாரத்தில் வகுத்துரைத்துள்ளார். இதே கருத்தைக் கச்சியப்பர் காவியமாம் கந்த புராணத்திலும் காண்கின்றோம்.

காண்டகைய தங்கண
வரைக்கடவுளார்போல்
வேண்டலுறு கற்பினர்த
மெய்யுரையினிற்கும்
ஈண்டையுள தெய்வதமு
மாமுகிலு மென்றால்
ஆண்டகைமை யோர்களு
மவர்க்கு நிகரன்றே"

என்பது கச்சியப்பர் கருத்து. மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம். அதற்கு நல்ல

ஸ்ரீ வ. குகசர்மா

அணிகலம் நல்ல மக்களைப் பெறுதல். இல்லற வாழ்க்கையில் வெறும் சுகத்தை மாத்திரம் விரும்புதல் கூடாது. பழியில்லாத சற்புத்திரரைப்பெறின் ஒருவ

தொடர்ச்சி 4-ம் பக்கம்

முன்னிதழ்த் தொடர்ச்சி

மகா கவி காளிதாசரின்

# குமார சம்பவம்

தமிழாக்கம்

பரமேஸ்வரக்கழகம் — ச. இராமச்சந்திரன்

இறுகிய கடினம்நீ இளகிய திரவம்நீ
துறுபெரு தூலம்நீ சூக்கும வுருவும்நீ
உறுமிகு கனமும்நீ உலகினி லகுவும்நீ
மறுவறு தோற்றம்நீ மறைபொரு ளவையும்நீ (71)

ஓமெனு முதலோடே உறைமறை முதல்வன்நீ
ஆமொரு முறைமூன்று லறைமறை பதிபன்நீ
காமுறு மவர்செய்கை கருமமொ டுறபேறு
தோமறு வீடென்றே சொலுமறை யிறைவன்நீ (72)

முதலுறு பொருளும்நீ முன்னிய பொருணலும்
உதவுறு மவனும்நீ உறமுத றணைஎன்றும்
விதமுட னுணர்வோய்நீ மிகுதிரி பிலியும்நீ
இதமுறு புருடன்நீ எனவுரை மொழிவாரே. (73)

தாதைய ரெவருக்குந் தந்தையு நீயென்றுங்
காதக விசையோதுங் கடவுளர் கடவுள்நீ
ஏதுவ துணருஞ்சி ரிறையவ ரிறைவன்நீ
பேதம திலாகும் பிரமர்கள் பிரமன்நீ (74)

மணியுறு மகமும்நீ மகமது புரிவோய்நீ
நுணியன நுகர்வும்நீ நுகர்பொரு ளவையும்நீ
அணிதரு மறிவன்நீ அறிபொரு ளதுவும்நீ
பணிதரு பவனும்நீ பணிகொளு மவனும்நீ (75)

# மெய்கண்ட நூல் காட்டும் மெய்ந்நெறி

## அறிவு ஆராய்ச்சியாகி ஒப்பிலா இன்பத்தை உதவி விளங்குவது

"அறிவுடையா ரெல்லா முடையர் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்"

என்பது வள்ளுவர் வாய்மொழி. எனவே மக்கள் துன்பம் நீங்கி, இன்பத்தோடு வாழ்வதற்கு உறுதுணையாயுள்ளது அறிவு. இவ்வாறு மக்கட்கு இன்றியமையாததாயுள்ள அறிவைப்பற்றிய ஆராய்ச்சியை நம் முன்னோர் மேற்கொண்டு ஆராய்ந்தனர். அவ்வாராய்ச்சியின் விளைவுதான் சமய நூல்கள். இந் நுண்பொருளாராய்ச்சியாகிய அறிவாராய்ச்சி, நான் ஆர்? என் உள்ளம் ஆர்? ஞானம் என்பதென்னை? தந்தை தாய் தாரம் ஆர்? வந்தவா றெங்ஙனே? போமாறேதோ?' என்பன போன்ற 'தன்னையுணர்தல்' அல்லது 'ஆன்மவிசாரணை' எனப்படும். இவ்வாறு தம்மையும் தம் அறிவையும் ஆய்வதற்குச் சமய நூலுணர்ச்சி இன்றியமையாதது. இவ்வுணர்ச்சியுடன் ஆராய்ந்த சமயிகள் பலர், பலதிறப்பட்ட முடிவுகளைக் கண்டனர். அவற்றுள் தொன்மையும் மேம்பாடும் உடையது மெய்கண்ட நூற்கொள்கையாம் சைவ சமயம். சைவசமயம் இறைவனைச் சிவம் என்[illegible] ரோடு வணங்குவ[illegible] என்னுஞ் சொல்லுக்கு நன்மை என்றும் அன்பு என்றும் பொருள்.

இச்சைவ சமயமாம் மெய்ந்நெறியில், இறை, உயிர் தளை என்னும் முப்பொருள்களும் உண்டு என்றும்; அவை நிலைபெற்றவை என்றும்; அவை முறையே பதி, பசு, பாசம் என்றும் அறியப்படும்.

### இறை

இறைக்குப் பதி, சிவன், ஈசன் என்ற பல பெயர்கள் உண்டு. இறைவன், முடிவிலாற்றலுடைமை, முற்றறிவுடைமை, எல்லாப் பொருள்களிடத்தும் கலந்திருக்குந் தன்மை, எல்லையில்லா இன்பமுடைமை, உயிர்கள்மாட்டுப் பொருளுடைமை போன்ற ஒப்புயர்வற்ற உயர்ந்த குணங்கள் நிரம்பப்பெற்றவர். ஆதி அந்தமற்று, தன் நினைப்பினால் எல்லாக் காரியங்களையும் செய்ய வல்லவர். அருவம், அருவுருவம், உருவம் என்ற மூவடிவம் கொண்டவர்.

"எவ்வெவர் தமமையேனும்
யாவ்வெவ்வியன்றுமப்போற்றின்
அவ்வவரிடமாய்க் கொண்டே
அவர்க்கருள் தருவாய்போற்றி"

என்றபடி அன்பர்களுக்கு அருளவேண்டி ஏற்ற வடிவை எடுப்பார். ஆனால், அவ்வடிவு நம் வடிவு போன்று, என்பு தோல் முதலியவற்றாலானதன்று.

### உயிர்

உயிருக்கு, ஆன்மா, பசு, அணு என்ற பெயர்களும் உண்டு. உயிர்களை நாம் கண்ணால் காணமுடியாது. அவை உடலோடு கூடியுள்ளபோது, அவ்வுடலைத்தால் நாம்காண்கின்றோம். உயிர்கள் ஆணவம் என்னும் பொருளால் அநாதியே கட்டுப்பட்டுக் கிடக்கின்றன. உயிர்களுக்குள்ள அறிவை ஆணவம் மறைக்கின்றது. உயிர்களுக்குத் தோற்றமும் அழிவும் இல்லை. உயிர் அறிவுடைப் பொருளாயிருப்பினும், இறைக்கும் உயிருக்கும் பல வேறுபாடுகள் உண்டு. அவை இறை ஒன்று உயிர் எண்ணில, இறை முற்றறிவினன், தானே அறிபவன், உயிர் சிற்றறிவுடையது, அறிவிக்க அறிவது; இறை இயல்பாகவே கட்டுகளின்றும் நீங்கியவர்; உயிர் அநாதியே ஆணவத்தால் கட்டப்பட்டிருப்பது; இறை எல்லாம் செய்ய வல்லவர், உயிர் சிறுசெயலே செய்ய வல்லது. இறை ஆண்டவன், உயிர் அடிமை என்பன போன்றவை.

### தளை

தளை, பாசம், கட்டு, மலம் என்ற பெயர்களால் இது குறிப்பிடப்படுகின்றது. இது ஆணவம், கன்மம், மாயை என்று மூவகைப்படும்.

(i) ஆணவம்: இது உயிர்களின் இச்சை, அறிவு, செயல்களைத் தொழிற்படாவண்ணம் மறைத்துக் கொண்டுளது. இவ்வாறு ஆன்மாக்கள் ஆணவத்தால் கட்டுண்ட நிலையே மெய்ந்நூற்கள் 'கேவலநிலை' எனப் பேசும். உயிரோடு ஆணவத்தின் சேர்க்கை செம்பிற் களிம்பு போன்றது என்பர்.

(ii) மாயை: மேற்சொன்னவாறு அநாதியாகவே செயலின்றிக் கேவல நிலையிலிருந்த உயிர்களை, இறைவன் தனது பேரருட் பெருங் கருணையினால் அந்நிலையினின்றும் நீங்கிப் பேரின்பப் பேற்றை அவைகள் அடைய அவைகட்குத் தனு, கரண, புவன போகங்களை அருளியுள்ளார். தனு உயிர்கள் அறிவதற்குக் கருவியாயுள்ள உடல்; கரணம் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கைக் குறிக்கும். இவை மெய், வாய், கண்,

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்கண்ட நூல் காட்டும் மெய்ந்நெறி

3-ம் பக்கத்தொடர்ச்சி

மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளின் மூலம் உயிர்களுக்கு அறிவிக்கின்றன. புவனம் என்பது, எண்ணில் உலகங்கள். போகம் உயிர்கள் அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்குக் காரணமாயுள்ளது. மேற்கண்ட எண்ணில் உலகங்களும், அதி நுட்பப் பொருளான மாயையினின்று தோன்றுகின்றன ஈண்டு தோற்றம் என்பது மாற்றத்தைக் குறிக்கும். இறைவன் திருவருளால் அதி நுட்பமான மாயையானது தனு, கரண, புவனபோகங்களாக மாறுகின்றது. இம்மாற்றத்தை இறைவனது ஆக்கல் தொழில் என்கிறோம்; மீண்டும் அவற்றை மாயையாக மாற்றுவதையே, அழித்தல் தொழில் என்கிறோம்; இவ்வாறு உயிர்கள் பிறந்து, இருந்து, இறந்துபடுதலே, அதாவது முறையே உடலோடு கூடி, உடலோடு வாழ்ந்து, உடலைவிட்டு நீங்குதலே இறைவனின் ஆக்கல், அளித்தல் என்னும் முத்தொழில்கள் என்பன. உயிர்கள் உடலெடுப்பதின் மூலம், நல்வினை தீவினைகளைச் செய்து, முறையே இன்ப துன்பங்களை அனுபவிக்கும் நிலைக்குச் 'சகல நிலை' எனப்படும்.

(iii) கன்மம்: மேற்கூறியவாறு உயிர்கள் தாம் செய்த நல்வினை தீவினைப் பயனாக இறைவன் ஆணைப்படி இன்ப துன்பங்களை அனுபவிக்கும். உயிர்களின் அறிவு வளர்ச்சிக்கும் அவைசெய்த நல்வினை தீவினைக்கும் ஏற்ப இறைவன் அவைகளுக்குப் பல உடல்களை அளிக்கின்றார். இவ்வாறு உடல்களைத் தாங்கி, இன்பதுன்பங்களை அநுபவிப்பதின் மூலம் ஆன்மாக்கள் அறிவு விளக்கம பெறுகின்றன. நிலைத்தபொருளிவை, நிலையாப் பொருளிவை என்ற பாகுபாடு ஏற்படுகிறது. நிலையாப் பொருளினின்றும் நீங்கி, நிலைத்த பொருளாம் இறைவன் பால் அன்பு செலுத்துவதன் பயனாக, உயிர்களுக்குப் பாசநீக்கம் ஏற்பட்டு, அவை இறைவனோடு இரண்டறக் கலக்கின்றன. அதுவே பேரின்பம் என்பது. அப்போது ஆணவம் தன் வலிகுன்றி, உயிர் அப்பேரின்பத்தை அனுபவிக்கத் துணை செய்கின்றது.

இவ்வாறு ஆன்மா இறையோடு ஒன்றிநின்று சிவமாந் தன்மையைக் காட்டும் நெறிக்குத் திருநெறி, பெருநெறி, செந்நெறி, சைவநெறி என்பன போன்ற பலபெயர்கள் உண்டு.

இம் மெய்ந்நெறிக் கொள்கைகள் தமிழர்களிடை, சங்க காலத்திற்கு முன்பே இருந்துவந்தன என்பது ஒரு சில பேரறிஞரின் முடிபு. தொல்காப்பியத்தில் கடவுள், உயிர், மெய், வினை, கந்தழி என்பன போன்ற சொற்கள் ஆளப்பட்டிருப்பதே இதற்குச் சான்று என்பர். இந்நெறியின் தொன்மை காரணமாய் இதற்கு மூதுநெறி என்ற பெயரும் உண்டு. தொல்காப்பியம், திருக்குறள் இவற்றில் மட்டுமன்றி, ஏனைய சங்க இலக்கியங்களிலும் இம்மெய்ந்நெறிக் கொள்கையாம் சைவசித்தாந்தத்தின் கருத்துக்களைக் காணலாம்.........

— சித்தாந்தம்.

# அறனெனப்படுவது...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

னுக்கு எழு பிறப்பிற்கும் தீமையுண்டாகாது. "இறந்த மேலோர் - துன்பமும் நிரயச்சேர்வும் துடைத்திடு தொன்மை நோக்கி - மைன் புறு புதல்வர்க்காக" திருமணம் செய்யவேண்டும் என்பது கச்சியப்பர் காட்டும் வழி. "மனைவியுடன் இருந்து பிறனில் விழையாமை முதலாகிய குற்றங்கள் நீக்கி வாழ்பவன் பிரமசாரிக்குச் சமனுவான்" என வேதங்கள் கூறும். வசிட்ட முனிவரானவர் கற்பினிற் சிறந்த அருந்ததியை விவாகஞ் செய்து இல்லற ஒழுக்கத்தில் நின்றும் மேலான முனிவர் எனவே போற்றப்படுகிறார்.

"இல்லறெதன் இல்லவள் மாண்பானுல்" என வள்ளுவர் வினவுகிறார். சகல சிறப்பும் உண்டாகும் என்பதே அதற்கு விடை. கச்சியப்பர் இவ்வினுவிற்கு விடையிறுப்பார் போன்று கூறும் பகுதியைப் பார்ப்போம்.

மேனவி யல்பால் வரையு
மெல்லியலை மேவிற்
ருனமுளதாகும் அரிதான
தவமாகும்
வானமுளதாகு மிவன்
மண்ணுமுளதாகும்
ஊனமில தாகுமரி
தொன்றுமிலையன்றே"

இல்லறதர்மத்தில்வாழும் முறையில் வாழ்பவன் தெய்மாக வைத்து எண்ணப்படுவான்" என்ற வள்ளுவர் வாக்குக்கு மிகப்பொருத்தமாயுள்ளது மேற்சுட்டிய செய்யுள்.

வள்ளுவரும் கச்சியப்பரும் இல்லாள் என்ற இடத்தில் பெண்களுக்கு ஆடவரிலும் மேலான பதவியையே கொடுக்கின்றனர். வீரப்புதல்வரை ஈன்று உலகம் புகழச் செய்யும் தாய்மாரை நாம் தெய்வமாகப் போற்றுதல் சாலச் சிறந்தது. அதுவே இல்லறத்தை நல்லறமாக்குவது.

# பொதுத் தேர்தல் சித்திரையிலா?

பொதுத் தேர்தல் சித்திரை (ஏப்பிறில்) மாசத்தில் நிகழச் செய்யுமாறு ஐக்கிய தேசியக்கட்சியார் ஆலோசிக்கின்றனராம். மொழிபற்றிய தீர்மானமே கால நிச்சயத்தைச் செய்தற்கும் உதவுமெனக்கருதப் படுகின்றது.

# மொழிபற்றி ஐ. தே. கட்சி தமிழ் அங்கத்தவர் முடிவு

மொழிப் பிரேரணைகள் பற்றி ஆராய ஐக்கிய தேசியக்கட்சி நியமித்த உபசபையின் தமிழ் அங்கத்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சித் தமிழ் அங்கத்தவர்களின் சார்பாக ஒரு தீர்மானஞ் செய்துள்ளனராம். அது அவ்வுபசபையின் தீர்மானமாகச் செய்யுமாறு முயற்சி நடக்கின்றது. மொழிப் பிரேரணைகளைக் கைவிட்டு, இலங்கை மக்களின் உரிமைகள் இவை இவை என வகுத்து அரசியல் திட்டத்தில் திருத்தம் செய்யப்படுதல் வேண்டும் என்பதாக அமைச்சர் ஸ்ரீ நடேசன் அவர்கள் ஒரு பிரேரணையை அவ்வுபசபையில் பிரேரிக்க ஸ்ரீ ஏ. எம். ஏ. அசீஸ் அவர்கள் அதை அநுவதிப்பார். அது ஏற்கப்பெற்றால் மாசிமாசம் நடக்கவிருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி மகாநாட்டில் அது சமர்ப்பிக்கப்படும்.

# புராணங்களின் பொருள் கொள்ளும் முறை

## பெரியபுராணத்தின் பலதிறப்பட்ட பெருமை

### வாழ்க்கை நிகழ்ச்சிகள் வரலாற்று உண்மைகளோடு சைவச் செம்பொருள் செறிந்திலங்குவது

மேலைச்சிவபுரி சன்மார்க்கசபையில் நடந்த பெரிய புராண விழாவில் கலாநிதி மா. இராசமாணிக்கனுர் அவர்கள் தலைமை தாங்கிப் பேசும்போது, "சங்க காலப் புலவர்கள் உள்ளதை உள்ளவாறேபாடினர். இடைக்காலப் புலவர் உள்ளதையும் இல்லதையும் பாடினர். பிற்காலப் புலவர் — இல்லதையே மிகுதியாகப் பாடினர்; இங்ஙனம் பாடியவருள் தலைசிறந்தவர்கள், தலபுராண ஆசிரியர்கள். இப் புராணங்கள் பெரும்பாலும் விசயநகர ஆட்சிக்குப் பின் வெள்ளையன் ஆட்சி வருவதற்குமுன் இருந்த இடைப்பட்ட காலத்தில் பாடப்பட்டவை. எல்லாத் தல புராணங்களும் ஒரே மாதிரியாகப் பாடப்பட்டுள்ளன. இந்திரன் தவம் புரிந்தான் என்பதைச் சொல்லாத தலபுராணமும் இல்லையெனலாம். இந்திரனுக்கு நம் தமிழ்நாட்டின்மீது — அதிலும் சோழநாட்டின்மீது— அதனிலும் தஞ்சை மாவட்டத்தின்மீதுதான் மிகுந்த பற்று. அவன் சீர்காழி, மாயூரம் முதலிய பகுதிகளில வந்து தவம் செய்ததாகப் பல புராணங்கள் கூறுகின்றன. கடந்தநூற்றாண்டுகளில் தேவர்கள் தமிழகத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததாக இப்புராணங்கள் பேசுகின்றன. இயற்கைக்கு மாறுபட்ட பல நிகழ்ச்சிகள் இவற்றில் காணலாம். சமணரால்ஏவப்பட்டயானை கொல்லப்பட்டு யானைமலையாக மாறியது என்றும், சமணர் ஏவிய பசுவின் உடலே பசுமலையாக மாறியது என்றும் அவ்வாறே நாகமலை ஏற்பட்டது என்றும் மதுரைத் தலபுராணமாகிய திருவிளையாடல்கூறுகின்றது. அறிவும் ஆராய்ச்சியும் நிறைந்த இக்காலத்தில் இவை எங்ஙனம் ஏற்றுகொள்ளப்படும்?

இத்தகைய கதைகளை நீக்கி ஒவ்வொரு புராணத்திலுமுள்ள சத்தானசெய்திகளையே கொள்ளுதல் அறிவுடைமையாகும். ஒவ்வொரு புராணத்திலும் கூறப்படுகின்ற நகரப்படலம், அந்தப் பழங்கால நகரஅமைப்பை அறிதற்குத் துணை புரிகிறது. ஒருசில படிப்பினைகளை ஆங்காங்கே காணலாம். இயற்கை வருணனைகள் சொல் நயமும் பொருளாழமும் கொண்ட செய்யுள்களசில ஆங்காங்கு காணப்படும். இவற்றையே அறிவுடையோர் கொள்வர். பாமர மக்கள் சக்கையாகிய கதையைக் கொள்வர். ஆயின் பெரிய புராணம் இத்தகைய இழி தகைமையுடையதன்று. அதன்கண் பேசப்படும் அற்புதங்களைத் தவிர ஏனைய எல்லாம் வரலாற்று உண்மைகளுக்கும் வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்கும் பொருந்துவனவாகவே உள்ளன. மறையவர் முதல் பறையர் [illegible] யும்; ஐவகை நிலப்பகுதிகள்பற்றிய இயல்புகளும், காபாலிகம், மாவிரதம், சைவம்போன்ற சைவஉட்பிரிவுகளைப்பற்றிய விளக்கங்களும் சமண பௌத்த சமயக்கொள்கைகளும் பிறவும் வேறு எந் நூலிலும் காண முடியாத அளவு பெரிய புராணத்தில் தெளிவாகக் காணப்படுகின்றன கல்வி, கேள்வி, ஒழுக்கம் ஆகிய மூன்றிலும் தலைசிறந்தவர் சேக்கிழார்என்பது அவருடைய பாக்களே நன்கு விளக்கும்.

ஆசிரியனது ஒழுக்கத்தை அவன் பாக்களைக் கொண்டுஉணரலாம் என்ற ஆங்கிலக் கூற்று முற்றும் உண்மையாகும். கருங்கக்கூறின் வரலாற்றின் உண்மைகள் என்னும் செங்கற்கள் கொண்டு சைவசமயம் என்னும் நறுஞ் சாந்து பூசப் பெற்ற பேரின்ப மாளிகை பெரியபுராணம் என்றுகூறுதல் தவருகாது.

மணிமேகலைக்குப் பிறகு தமிழ் நாட்டைப்பற்றியும் அதன்கண் வாழ்ந்ததமிழர்களைப்பற்றியும் தமிழன் பாடிய ஒரே தமிழ்க் காவியம் பெரியபுராணம்தான். இதனுள் ஏறத்தாழ 600 ஆண்டுகள் தமிழகம் இருந்த நிலை, அரசியல் நிலை நாட்டுப் பாகுபாட்டுப்பிரிவுகள் மக்கள் மேற்கொண்ட சமயங்கள் நாகரிகம், பண்பாடு முதலிய அனைத்தை [illegible] அறிவுடையோர் கண்டு [illegible]லாம். வரலாற்று உணர்ச்சியும் தமிழ் காட்டு உணர்ச்சியும சமய உணர்ச்சியும் உடைய மக்களுக்கு இந் நூல் பெரிய அறிவுவிருந்தாகும்" என்று கூறினர். (தமிழ் நாடு)

# புயல் நட்ட நிவாரணம்

புயல் உண்டாக்கிய நட்டத்துக்கு நிவாரணம் செய்யுமாறு வடமாகாண அரசாங்க அதிபர் தலைமையில் அவசரக் கூட்டமொன்று நடைபெற்றது. நட்டமடைந்தவர்களின் தொகைக்குத் தக்கவாறு பத்து ரூபா, இருபத்தைந்து ரூபா வீதமாகவும் வீடு இழந்தோருக்கு ஐம்பது ரூபா வீதமாகவும் உடன் உதவி கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம். வீடுகளை இழந்தோரே பல நூற்றுக்கணக்கானேர் என அறிய வருகின்றது.

புயல் உண்டாக்கிய நட்டத்துக்கு நிவாரணம் செய்யுமாறு மத்திய அரசாங்கத்தைக் கேட்கும் பிரேரணை ஒன்றை யாழ்ப்பாணம் நகர சபையில் திரு. ஏ. துரைராசசிங்கம் பிரேரிப்பார் என்றும் அறியவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

## இருவாரப் பலன்கள், 11—12—55 —— 17—12—55

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

உயர்வுதாழ்வு தரும் தளப்பமான வாரம். நீர் வருந்திஉழைக்கவேண்டும். பொறுப்புகளும் கூடுதலாகும். அபாயங்களைப்பற்றி திங்கள் செவ்வாய் புதன் எச்சரிக்கையாயிருக்கவும்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

இந்தவாரம் சுகவீனங்களுக்கிடமுண்டு, ஒன்றையும் புதியதாய்த் தொடங்கவேண்டாம். புதுமுயற்சிகள் விரும்பிய பலன்களைத் தரா. வாரத்தின் இரண்டாம் பகுதியில் இழிமொழி பாரப்புவோர் குடும்பக் குழப்பங்களை உண்டாக்கி நிற்பர்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

கடைசி நாளைத் தவிர இந்த வாரம் ஒரு அளவுக்குக் குற்றமில்லாததாயிருக்க இடமிருக்கின்றது. உம்முடைய சொந்தச் சிக்கல்களுட் சில நீக்கப்படும் புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும்

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

பணத்துறையில் நல்ல வாரம். ஆனால் சுகவீனங்களுக்கிடமுண்டு. வயிற்றுக் குழப்படிகள் வரக்கூடும். பிள்ளைகள் பெரும் துன்பத்தை உண்டாக்குவார்கள்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

இந்தவாரம் இனத்தவர்கள் உம்மை அதிகம் நிலைகுலையச் செய்யக்கூடும், வரவு செலவைச் சமாளிக்கமுடியாது வருந்துவீர். வார இறுதியில் இடைஞ்சல்களிலிருந்து நீங்க நண்பர் உதவி செய்வர்.

**கன்னிராசி உத்திரம் 2 3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

இந்த வாரம் முழுதும் உம்முடைய மனம் அமைதியாயிருக்க மாட்டாது. சுகவீனங்களுக்கும் குடும்பக் குழப்பங்களுக்குமிடமுண்டு. இப்பொழுது ஒன்றையும் புதியதாய்த் தொடங்கவேண்டாம்.

**துலாம்சித்திரை 3,4ம் பாதம்.**

**சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

நண்பர்களுடனும் இனத்தவர்களுடனும் இந்தவாரம் சண்டைகளுக்கிடமுண்டு. அவர்களைப் பிழையாய் விளங்குவதில் விரைவீர். புதுமுயற்சிகளுக்கு எதிர்ப்புண்டாகும். பங்காளருடன் முட்டுப்படுதலைத் தவிர்க்கவும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம பாதம் அநுஷம், கேட்டை.**

இந்த வாரம் தேகசுகம் சிறிதுமிருக்கமாட்டாது. குடும்பப் பகுதியிலும் எல்லாம நல்லாயில்லை ஒன்றையும் புதியதாய்த்தொடங்கவேண்டாம். செலவதிகரிக்கும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்**

இந்த வாரம் உம்முடைய குடும்ப நிலைமைகளில் திருத்தம் நிச்சயம். ஆனால் தேகசுகம் தொடர்ந்து சிக்கலாகவேயிருக்கும், ஆறுதல் பெறுக. புதுப் பொறுப்புக்களை மேற்கொள்ளாது விடுக.

**மகராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

இரகசியப் பகைவரைப்பற்றி இந்தவாரம் எச்சரிக்கையாயிருக்கவும். உம்முடைய இனத்தவர்களும் சண்டை தொடுத்து நிற்பார்கள். ஆனால் உத்தியோகத்துறையில் நல்ல வாரம் உம்முடைய முயற்சிகள் நல்ல பலனைத் தரும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

ஒரு நல்லவாரம். நீர் அதிக புகழை ஈட்டுவீர். எதிர்ப்பு நீங்கி உம்மை எதிரிட்டு நிற்கும் இடைஞ்சல்களுட் பலவற்றை நீர் நீக்கக் கூடியதாயிருக்கும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

இந்தவாரம் நீர் பழிசுமத்தப்படுவீர். மற்றவர்களின் கருமங்களில் கைவைக்க வேண்டாம். குடும்பச் சந்தோஷமும் உமக்குச் சிறிதுமிருக்கமாட்டாது.

---

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை

சென்ற திங்கட்கிழமை (5-12-55) யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நாவலர்மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை நன்கு நடைபெற்றது.

கடவுளாராதனை தமிழ்மறை ஓதல், நாவலர்சரித்திரம் படித்தல், மகேசுர பூசை ஆகியவை முற்பகல் தொடக்கம் நடந்து நிறைவுற்றன. அன்றிரவு சபைத் தலைவர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் பகிரங்கக்கூட்டம் நடைபெற்றது. மாணவர் சொற்பொழிவுகளின் பின் 'நாவலரும் சைவமும்' 'நாவலர் காலம்' 'நாவலரும் நாமும்' என்னும் பொருள்களில், திரு. செ. கோவிந்தசாமி, வித்துவான் திரு க. கார்த்திகேசு, திரு. நா. சேனாதிராசா ஆகியோர் முறையே சொற்பொழிவுகளாற்றினர்.

## வேதாகம பாடசாலை அமைக்க முயற்சி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

களுடைய ஆதரவைப்பெறுதல்.

4. இவ்வகுப்பை நடத்துதற்குரிய செலவுக்காக வருடமொன்றுக்கு ரூபா 30 வீதம் கொடுக்கக்கூடிய அபிமானிகளைத் தேடுதல்.

5. இப் பாடசாலையை நடத்துதற்குரிய விதானங்களை எழுதுதற்கு சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்களும் திரு. சி. நாகையாவும் நியமிக்கப்பெற்றனர்.

6. இச் சபையின் அடுத்த கூட்டத்தை வருகிற தைமாதத்தில் நடத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

# விஞ்ஞானத்தமிழ்ச்சொற்கோவை

## வடஇலங்கைவிஞ்ஞான ஆசிரியசங்கம் காட்டும் ஆக்க வழி

**வடமாகாண விஞ்ஞான ஆசிரிய சங்கத் தலைவர் திரு. எ. ஈ தம்பர் அவர்களும் பொதுக் காரியதரிசி திரு. வி. மகாதேவன் அவர்களும் கைச்சாத்திட்டு கொழும்பு சுயபாஷைப் பகுதிக் காரியாதிகாரிக்கு அனுப்பிய ஒரு கடிதத்தின் சாரம் இங்கே தரப்படுகின்றது. விஞ்ஞானத் தமிழ்ச்சொல் ஆக்கத்துக்குப் பெருநன்மை பயப்பதாகும்.**

வடமாகாண விஞ்ஞான ஆசிரிய சங்கத்தார் (விஞ்ஞானச்சொற்கள்பற்றி ஆராயுமாறு) நியமித்த விசேட உப சபையார் தங்கள் ஆராய்ச்சியின் முடிவுகளை சுயபாஷைப் பகுதியாருக்கும் கல்விப்பகுதியாருக்கும் அறியத் தருகின்றனர்.

விஞ்ஞானச் சொல் ஆராய்ச்சி சென்னையில் அரசாங்க ஆதரவில் சில ஆண்டுகளாகநடந்து வருகின்றது. சென்னை — அண்ணாமலைச் சர்வகலாசாலைகளின ஒத்துழைப்புடன் சில சிறந்த இந்திய இலங்கை அறிஞர் அதில் ஈடுபட்டு வருகின்றனர். பொது விஞ்ஞானம், பிரகிருதிசாத்திரம, இரசாயன சாத்திரம், சீவசாத்திரம் கணித சாத்திரம் ஆகியவற்றில் அவர்கள் உதவிய வெளியீடுகள் பல இருக்கின்றன.

இத்துறையில் உழைத்தற்கு நியமிக்கப்பட்ட இலங்கைச் சபையார் சென்னைச் சபையாருடன் நெருங்கிய தொடர்பு உண்டாக்கிக்கொண்டு அவர்களுடைய சொற்கோவையை முழுமையும்பயன்படுத்துதல் வேண்டுமென்று முதலாவதாய் நாங்கள் விரும்புகின்றோம். சென்னையிலுள்ளார் தங்கள் சொற்கோவையைப் பல ஆண்டுகளாகப் பரீட்சித்துப் பார்த்து இப்பொழுது அதைத் திருப்பிப் பார்த்துத் திருத்துகின்றனர். அவர்கள் பரீட்சித்துப் பெற்ற அநுபவத்தை இலங்கைஆராய்ச்சிச்சபையார் பயன்படுத்திக் கொள்ளுதல் புத்தியாகும். சொல் ஆக்கம் திருத்தம் ஆகியவற்றில் அவர்களுடன் தொடர்புண்டாக்குவதனால் இது இனிது நிறைவேறச் செய்யலாம்.

சென்னையார் அமைக்கும் சொற்கோவைக்கும் இலங்கையார் அமைக்கும் சொற்கோவைக்கும் பெரும் வேறுபாடிருக்குமேயானால் அவர்கள் ஆக்கிய பெருந்தொகை விஞ்ஞான நூல்களைநாம் பயன்படுத்த முடியாமல் வரும். இயன்ற அளவுக்கு இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே சொற் கோவையைப் பயன்படுத்துதல் பெரும் நன்மை பயப்பதாகும். இவ்வாறு நாங்கள் கூறுவதை ஏற்றுக்கொண்டால் வேண்டிய தொடர்புண்டாக்குதற்கு இலங்கைஅரசாங்கம் சென்னை அரசாங்கத்துடன் ஆலோசிக்கத் தொடங்கவேண்டும். இக் காரியத்தில் தகுந்தவாறு வேண்டியதை செய்யுமாறு நாங்கள் அழுத்திக்கேட்டுக்கொள்ளுகிறோம்.

இலங்கைச் சபையார் வெளியிட்ட முதல் விஞ்ஞானச் சொற்கோவையில் அது திருத்தப்படலாமென்ற காலக்குறிப்பொன்றும் காணப்படா திருத்தல் நூதனமாயிருக்கின்றது. பேரறிஞர்கள் செய்த நூல்களே முடிந்தமுடிபாவதில்லை. அனுபவத்திற்கேற்ற திருத்தம செய்தற்கு இடம் கொடாதிருத்தல் அறிஞர் மரபுக்கு மாறுயுள்ளது. குறிக்கப்பட்ட காலத்தின் பின் பொதுவான அறிஞர்களும், பேரறிஞர்களும் ஆசிரியர்களும் தகுந்த திருத்த முறைகளை எடுத்துக் காட்ட இடங்கொடுத்தலே முறை.

இலங்கைச்சொற்கோவைச் சபையாருக்கு வேண்டிய உதவியை கூறும்பொருட்டு வட இலங்கை விஞ்ஞான ஆசிரிய சங்கத்தார் தகுந்தவரங்கத பேரறிஞர் உறுப்பினரான விசேட உபசபை ஒன்றை நியமித்திருக்கின்றனர். இச்சபையாருடன் அரசாங்கம் நியமித்தசபையார் கலந்து ஆலோசனை செய்தற்குத் தகுந்த ஒழுங்கு எதுவாயினும் ஊக்கமாகச் செய்யுமாறு அழுத்திக் கேட்கிறோம்.

---

## யாழ்ப்பாணம் மாநகர சபை

### பஸ் ஸ்டான்ட் உட்படகாலையில் 1956-ம் ஆண்டுக்கான வாடகையை அறவிடும் உரிமைக் குத்தகைக்கான கேள்விப்பத்திரம்

1—1—1956 முதல் ஒரு வருட காலத்துக்கு பஸ் ஸ்ராண்டிலும், காலையிலும் வாடகையை அறவிடும் உரிமையைக் குத்தகையாய்ப் பெறுவதற்கான முத்திரை இடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணம் மாநகரசபை கொமிஷனரால் கோரப்படுகின்றன.

மாதிரிக் கேள்விப் பத்திரங்களை மாநகரசபைக் கந்தோரில ரூபா 500 அடைப்பணமாகக் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை வழங்குவதற்குமுன் முத்திரைகளுக்காகவும், நொத்தாரிஸார் மூலம பிணைஉறுதி முடித்துக்கொள்வதற்கான நொத்தாரிஸார் சலாருக்காகவும் மேலதிகமாகச்ரூபா 150 ஐயும் அடைப்பணமாக செலுத்தவேண்டும்.

மாதிரிக் கேள்விப் பத்திரங்கள் 1955-ம் ஆண்டு மார்கழி மாதம 16-ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிவரையும் வழங்கப்படும்.

சகல கேள்விப் பத்திரங்களும் மேல் உறையின் மேற்பக்கமாக இடதுகோணத்தில் பஸ் ஸ்டாண்ட் காலை குத்தகைக் கேள்விப் பத்திரம் எனக் குறித்து, யாழ்ப்பாண மாநகரசபை கொமிஷனருக்கு விலாசமிட்டு, 1955-ம ஆண்டு மார்கழி மாதம 16ம் திகதி வெள்ளிக்கிழமை மத்தியானம் 12 மணிக்குப் பிந்தாது இக்கந்தோர் வந்து சேரவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் அதேநாளில் தானே 16-12-55 பிற்பகல 12.15 மணிக்கு இக்கந்தோரில் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர்கள் அனைவரும் சமுகந்தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சபையால் தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் அவ்வாறு தெரிவுசெய்யப்பட்டு 5 நாட்களுக்குள் தமது குத்தகைத் தொகையின மூன்றில ஒரு பங்கைக் கட்டிவிடவேண்டும், ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் 1955-ம ஆண்டு மார்கழி மாதம 23-ந் திகதிக்கு முன்னதாக, முன்னர் தாம கட்டிய ரூபா 150 உடன் சேர்த்து முத்திரைகள்கொடுத்தும், நொத்தாரிஸ்சலாரை இறுத்தும், உண்மையான காணியை ஈடாகக் கொடுத்து நொத்தாரிஸ் மூலம் பிணைஉறுதி முடித்துக் கொள்ளவேண்டும்.

மிகுதித்தொகை எட்டு சம பங்குகளாகப் பிரித்து ஒவ்வொரு மாதமும் 15-ந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கட்டப்படவேண்டும். இதில் முதல் கட்டுப் பணம் குத்தகை நிபந்தனைகளுக்கிணங்க 1956-ம் ஆண்டு தை மாதம் 15ம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கட்டப்படவேண்டும்.

குத்தகை நிபந்தனைப் பத்திரங்கள் இக்கந்தோரில் பார்வையிடுவதற்காகக் கிடைக்கும்.

எந்தக் கேள்விக்காரரும் கேட்கப்படும் தொகையைக் கட்டவும், நொத்தாரிஸ்மூலம் பிணை உறுதி முடிக்கவும தவறினால அவரது அடைப்பணம் பறிமுதலாக்கப்படும். குத்தகையும் திரும்ப விற்கப்படும்.

எல்லாக் கேள்விகளையும் அல்லது எந்த ஒரு கேள்வியையும் நியாயம் காட்டாமலே தள்ளிவிட சபைக்கு உரிமையுண்டு.

மற்றும் விபரங்களை இக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

ஹட்சன் செல்வராஜா
கொமிஷனருக்காக
யாழ்ப்பாணம் மாநகர சபை

மாநகரசபைக் கந்தோர்,
யாழ்ப்பாணம்
6—12—55
G 48 9 12

## புயல் நட்ட நிவாரணம்

—

யாழ்ப்பாணத்தில் புயல் உண்டாக்கிய நட்டத்துக்கு நிவாரணம் செய்யும்பொருட்டு சமூக சேவை அமைச்சர் மூன்று இலட்சம் ரூபா கொடுக்கின்றாராம். விசாரணை முடிந்தபின் மேலும் கூடக் கொடுக்கப்படும் என்று கூறப்படுகின்றது.

புயலால் உண்டான நட்டத்துக்கு நிவாரணம்செய்யப்படாதென்றும் நட்டமடைந்தவர்களுக்குச் சிறு உதவி மாத்திரம் கொடுபடுமென்றும் இப்பொழுது கூறப்படுகின்றது.

—

## மொழிபற்றித் தமிழர் மகாநாட்டார் ஆலோசனை

—

தமிழ்மொழி நிலைமைபற்றித் தமிழர் மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களுடன் பல தமிழ்ச் சட்ட அறிஞர்கள் ஆலோசித்து வருகிறார்களாம். அடுத்த முறை அவர்கள் கூடும்பொழுது சில தீர்மானங்கள் செய்யப்படுமென்று கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேராசை பெருக்கும் உள்ளத்திற்கு ஒரு சாட்டை

2-ம் பக்கத்தொடர்ச்சி

மலரெதுவுமின்றி மணஞ் சூழ்கிறது. எல்லையை முதலாக அடைந்துவிட்ட அக்குதிரையின் — அதன் மீது சவாரி செய்தவனின் ஏன்? — அதன் பேரில் பணங் கட்டியவர்களின் நிலையை அவன் அடைகிருன். தன்னை மறக்கிருன். தன் சூழ்நிலையை மறக்கிருன். இந்நிலையில் அவன் உள்ளத்தில் மலர்ச்சி ஏற்படுகிறது. அவனுடைய நாவில் நாட்டியமாடுகிருள் கலாதேவி. கிடைத்தற்கரிய சொல்முத்துக்களையும், கவிதை மணிகளையும் அவனுடைய வாய் உதிர்க்கிறது. அவைகள் கவிதைகளாகிப் பின் அழியாக் காவியமாகிவிடுகின்றன,

கவிஞன் ஒருவன் வழி நெடுகச்செல்கிருன். அவனை ஆதிக்கம் செய்து கொண்டே சென்றது அவனுடைய கவிநோக்கு. தரையிற்கிடந்த சிறு சிறு கூழாங்கற்கள் பெருஞ்சிலைகள் ஆறு, மலை மேகம், வானம் இவை ஒவ்வொன்றும் அவனுடைய கவிநோக்கிற்கு ஒருபெரும்விருந்தளித்தன. அவைகள் அவனுடன் வாய்விட்டுப் பேசின. அவற்றையெல்லாம் அவன் ஏட்டுச்சுவடிகளில் வடித்தான் கவிதையாக. அவை இன்றும் அழிவற்றுக் காணப்படுகின்றன. ஒவ்வொரு நாட்டுக் கவிஞனும் ஒவ்வொரு வித உணர்ச்சியைப் பெறுகிருன். மேற்கூறிய சாதாரணமான பொருள்களை அவன் எப்படி வரவேற்கிருன்? தன்னுடைய கற்பனைச் சுடரின் ஒரு தூண்டுகோலெனவே அவன மதிக்கிருன். வாழ்த்துகிருன் — இன்பமடைகிருன.

மேற்கூறியவற்றைப்பற்றிய வருணனைகளற்ற காவியம் பெரிதும் கிடைக்கவே கிடையாதெனலாம்.

வருணனையற்ற கவிதை கவிதையாகுமா? வருணனை எப்படி மாறியிருப்பினும், கவிநோக்கு, கவித்திறன் என்பதைமட்டும் அடிப்படையாகக்கொண்டால் கவிஞர்கள் எந்நாட்டவராயினும் அவர்கள் உளம் ஒன்றே என்ற கூற்றின் உண்மை நன்கு புலப்படுகிறது.

## (3.) ஆறு

ஒரு ஆற்றில் புதுத் தண்ணீர் இருகரைகளையுந் தழுவியவாறு ஓடுகிறது. அது பார்ப்பவர் உள்ளத்திற்கேற்ப உருவம் பெறுகிறது. இப்படிப்பட்ட காட்டாறு ஒன்று ஒரு கவிஞன் கண்களில் படுகிறது. அவன் ஒரு மேனாட்டுக் கவிஞன். எச். டபிள்யு. லாங் பெலோ என்பது அவன் பெயர். அவன் கவிநோக்கு என்ற கண்ணுடியைக்கொண்டு அவ்வாற்றைக் கவனித்துப்பார்த்துக்கொள்ளுகிருன். அது தன் சுயசரிதத்தைச் சொல்லுகிறதாம். அவன் கூற்று:— "நான் ஒரு பெயரேயில்லாத சிற்ருேடை. என்னை ஒருவரும் அறிந்திலர். கரடுமுரடான வரிசைப் படிக்கற்கள். அதன்மேல் ஒவ்வொன்ருகத் தட்டுத்தடுமாறிக்கொண்டு ஒரு சிறு குழந்தை இறங்கினுல் எப்படியிருக்குமோ அதுபோலத்தான் நான் அந்த மலையினின்று இறங்கி வந்தேன். நாகரீக உலகைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் என்னைப்பிடித்தது. ஓடினேன் — ஓடினேன். ஏதோவொன்று என்னைத் துரத்திக்கொண்டு வந்தமாதிரி இருந்தது. இருண்ட பயங்கரமான காட்டிலிருந்து திறந்த வெளியை நோக்கி ஓடிக் கொண்டிருந்தேன். எண்ணற்ற துன்பங்கள் என்னைச் சூழ்ந்தன. பாறைகளிலிருந்து கீழே விழுந்தேன். பெரிய பெரிய மரங்களை இழுத்தேன். இவ்வளவு இன்னல்களிலும் காண இன்பங் கண்டேன்.

அது எப்படிப்பட்ட இன்பமென்று கேட்பீர்கள்? அதுதான் எண்ணற்ற நிலங்களுக்கு என் இரு கைகளாலும் நீர் பாய்ச்சிச் செழிக்கச் செய்ததினுல் பெற்ற இன்பம். கால்நடைகளின் தாகத்தைத் தவிர்த்ததினுல் பெற்ற இன்பம். பல வண்ணப் பறவைகளின் பிரியாத நட்பை நான் பெற்றமையால் கிடைத்த இன்பம்.

ஓடும் ஆறு இவ்வளவு கற்பனையைத் தட்டி எழுப்பியது அவனது உள்ளத்தில், இதைப்போன்றே நீரோடை ஒன்றைப் பற்றிக் குறிப்பிடும்போது லார்ட் டென்னிசன் என்பவர் "அழிந்துபோகக்கூடிய வாழ்வையுடைய ஒவ்வொரு மனிதனும், ஏன்? மனிதர்களும் இவ்வுலகிற்கு வருகிருர்கள். பின் எப்படிச் சொல்லாமல் வந்தார்களோ அதேபோல் திடீரென்று இவ்வுலகினின்று மீளாவிடை பெற்றுவிடுகிருர்கள். ஆனல் நானே என்றென்றும் நிலைபெருமல் அழிவையே அடையாமல் ஓடிக்கொண்டேயிருக்கிறேன" என்று அந்த நீரோடை பெருமிதத்துடன் சொல்லிக்கொண்டே செல்கிறதென்கிருர்.

நுரை பொங்க ஓடும் ஆறு கவியரசர் கம்பருடைய கற்பனைத் திரையில் வேருெருகாட்சியைப் படம் பிடித்துக்காட்டுகிறது. அது அவருடைய கற்பனைச் சுடரை வேருெரு முறையில தூண்டிவிடுகிறது. ஆற்றுப்படலத்தில் கோசல நாட்டில் ஓடிய ஆருகிய சரயு நதியின் பெருமையைப்பற்றிக் கூறுகிருர். அவருடைய வருணனையைப் பாருங்கள்!

> 'சரயு வென்பது தாய் முலை யன்னதிவ்
> உரவு நீர் நிலத் தோங்கு முயிர்க் கெலாம'

உலகில் எண்ணற்ற உயிர்களெல்லாம் அபிவிருத்தி அடையாமல் நிற்கின்றன. அவற்றுக்கெல்லாம் தன் அன்புக் கரங்களால் நீரையும் அதனல் விளையும் உணவுப் பொருள்களையும் உண்ண உதவுகிறது. அந்தச் சரயு. அது எதுபோன்றிருக்கிறது? நீரும் உணவும் ஒருங்கே அமைந்த பாலைக் கொடுத்துக் குழந்தைகளை வளர்க்கும் ஒரு தாயின் மார்பகத்தை ஒத்திருக்கிறது என்று கூறுமிடத்துக் கம்பரது எண்ண அலைகளும் முன்னல் செல்லுகின்ற, லாங்பெல்லோவின் கற்பனை அலைகளும் ஒரே கரையை நோக்கி விரைவது நன்கு புலப்படுகிறதல்லவா!

மற்ருெரு இடத்தில் கம்பர் ஆற்றைப் பற்றிக் கூறும்போது, "ஆற்று வெள்ளம் அடர்ந்தகாடுகள், சண்பகச்சோலைகள், தடாகங்கள், மணற் கேணிகள், கமுக வனங்கள், வயல்கள், இவைகளினூடே நெளிந்து சென்று வருவது, எல்லா உடல்களிலும் உயிர் புகுந்து உலாவுதல்போன்றிருக்கிறதென்கிருர்.

ஆற்றைப்பற்றிச் சீவக சிந்தாமணியில் ஆசிரியர் திருத்தக்கதேவர் பேசும்போது, ஆறு என்பது அவருக்குச்சாதாரணமானதொரு நீரோட்டம் என்று மட்டும் பொருள்படவில்லையாம். கரைகளைத் தாக்கிக் கொண்டு விரைந்து ஓடும் ஆற்றை அவர் கூர்ந்து பார்த்துக்கொண்டேயிருக்கிருர். அதன் மேற்பரப்பில் நுரை திரண்டிருக்கிறது. உடனே அவரது கற்பனைச் சுடர் தூண்டப்படுகிறது. தன்னை மறந்து கவிதையை இயற்றுகிருர். அதன் உட்கருத்தை உணர்ந்து பார்த்தால் அவ ... கூற்றின் அழகும் நன்கு பிரகாசிக்கும்.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**616313,00**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன,

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிரூப்பர்.


# சைவ நன்னெறியில் நடந்து காட்டிய நாவலர் பெருமான்

1-ம் பக்கத்தொடர்ச்சி

கள் வாழ்க்கையை அர்ப்பணஞ் செய்கிருர்கள். எந்நாட்டவரும் எக்காலத்தவரும், போற்றத் தகுந்த முறையில் அவர்களுடையவாழ்க்கைபிரதிபலிக்கின்றது. இவை இப்படியிருக்க இவர்கள் பிறந்த நாடு மண்ணிலே புதைந்து விடுகின்றது. இவர்கள் வாழ்ந்தகாலம் மறதியில் மறைந்து விடுகின்றது. இவர்கள் வாழ்க்கை வரலாறே பிற்காலத்தில் கட்டுக்கதைகளாக மாறி விடுகின்றன. ஆனல் இவர்கள் மக்கள் மனதில் வேருன்றி விடுகின்றனர். இவர்களது வாழ்க்கை வரலாறு சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுகின்றது. இவர்களது தொண்டு பிற்காலத்தவருக்கு வாழ்க்கை வழிகாட்டும் ஒரு எடுத்துக்காட்டாக நிலவுகின்றது. இதனுலேயே மக்கள் இவர்களை தெய்வமெனக் கருதுகின்றனர். போற்றிப் புகழுகின்றனர்.

காலத்தின் தேவைக்குத் தக்கவாறு மகான்கள் அவதரிக்கின்ருர்கள். அந்தக் காலத்தின் சேவையைத் திருப்தி செய்கிருர்கள். "எப்பொழுது உலகில் தர்மம் குன்றி அதர்மம் அதிகரிக்கின்றதோ அப்பொழுது நான் அவதரிக்கின்றேன்" என்ருர் கீதையில் கிருஷ்ண பரமாத்மா. சனங்களுடைய எண்ணத்திலே கலக்கம்; பார்வையிலே சூனியம்; செயலிலே தடுமாற்றம. இப்படியான நிலைமையில்தான் மகான்கள் தோன்றி அந்தச் சனங்களுடைய உள்ளத்திலே நிதானத்தை உண்டுபண்ணுகிருர்கள். தாமே உலகத்திற்கு உதாரண புருஷர்களாக வாழ்க்கையை நடத்து காட்டுகிருர்கள். அப்படி நடந்துகாட்டியவர்தான் நமது நாவலர் அவர்கள்.

[ வளரும் ]

"தன் கணவனுகிய கடலுக்குச் சூட்டுதற்கு ஆறு என்னும் அக்கன்னி, தன் தலைமேல் நுரையாகிய மாலையைக்கொண்டுபோகிருள் என்கிருர்.

இதினின்று ஒரு சாதாரணமான ஆற்றுவெள்ளம், எவ்வாறு கவிஞர்களின் கற்பனை வெள்ளத்தைப் பெருக்கெடுத்து ஓடச்செய்கிறதென்பது நன்கு வெளிப்படையாகிறதல்லவா? இதுபோன்றே, கவிஞர்களது மேகம், மலை, சூரியனது தோற்றம் மறைவு சந்திரனின் தோற்றம் இவற்றின் வருணனைகளில் அவர்களுடைய உள்ளங்களின் ஒற்றுமையை நன்கு புரிந்துகொள்ள முடிகிறது.

— வளரும்.

> வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
> கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
> நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
> மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond.) residing at 245, Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna on Friday Dec, 9, 1955.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org